## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்படுகிறது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு

அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சபையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமத்தின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகளை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களின் தொகுதி | இந்த வாகனத்தை காப்பீடு செய்வதற்கு உரியதாக எடுக்கப்பட்ட மதிப்பீட்டு பெறுமதி கணக்குகளில் சீராக்கப்பட்டது. எவ்வாறான போதிலும், வாகனக் கட்டமைப்பின் உத்தேச ஆயட்காலம் 4 வருடங்கள் | மீள்மதிப்பீடு சரியாக மேற்கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அதிகாரசபைக்கு சொந்தமாக 42 மோட்டார் வாகனங்கள் காணப்பட்ட போதிலும், காப்பீட்டு தேவைப்பாட்டுக்காக தேறிய பெறுமதி ரூபா 12 மில்லியனான மோட்டார் வாகனமொன்று மாத்திரம் ரூபா 16 மில்லியனுக்கு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மோட்டார் வாகனக் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 4 மில்லியனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. மேலும், அந்த மீள்மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு மோட்டார் வாகனங்கள் பெறுமானத் தேய்விடப்பட்ட காரணத்தால் மோட்டார் வாகனங்களின் தேறிய பெறுமதி மற்றும் ஆண்டின் மிகை ரூபா 250,000 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | என்பதால் எளிய முறையின் கீழ் பெறுமானத் தேய்வு விகிதம் 25 சதவீதம் ஆகும். ஒட்டுமொத்த வாகனக் கட்டமைப்பும் 2025 ஆம் ஆண்டின் போது மீள்மதிப்பீடு செய்யப்பட்டு புத்தகங்களில் சீராக்கப்படவுள்ளது. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்படு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராத காரணத்தால் முறையே கிரயம் ரூபா 94.17 மில்லியன் மற்றும் ரூபா 3.84 மில்லியனான மோட்டார் வாகனங்கள் மற்றும் கணினி மென்பொருட்கள் முழுமையாக தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டது. அதற்கமைய ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது மோட்டார் வாகனத் தொகுதி மற்றும் கணினி உபகரண உருப்படிகளை மீள்மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்து அதற்கமைய கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | அதிகாரசபையால் பயன்படுத்தப்படும் கட்டிடத்தின் நிர்மாணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 72.91 மில்லியன் கட்டிடத்தின் கீழ் மூலதனமாக்கப்படுவதற்கு பதிலாக | கட்டுபெத்த நிறுவனத்தின் நிர்மாணங்கள் தொடர்பில் தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்தப்பட்ட இறுதிப் பட்டியல்களின் பெறுமதி 2024 ஆம் ஆண்டின் போது நிதிப் | கட்டிடங்கள் பயன்படுத்தப்படும் எனின் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் அதற்காக |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறை வேலையின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கட்டிடங்களின் மீதி மற்றும் நடைமுறை வேலை கணக்கின் மீதி ஆகியன முறையே அந்த அளவினால் அதிகரித்து மற்றும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 69 ஆம் பந்திக்கமைய பெறுமானத் தேய்விடப்படாமையால் ஆண்டின் மிகை மற்றும் கட்டிடக் கணக்கின் பெறுமானத் தேய்வு ரூபா 3.64 மில்லியனால் முறையே அதிகரித்து மற்றும் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 12.74 மில்லியன் தொகையான இறுதிப் பட்டியல்கள் 2025 மார்ச் 10 ஆந் திகதி நிதிப் பிரிவிற்கு கிடைத்திருந்ததுடன், இறுதிப் பட்டியல் கிடைக்கும் வரையிலும் குறித்த கட்டிடங்களுக்கு கிரயத்தினை கணிப்பீடு செய்ய முடியாது. 2025 ஆம் ஆண்டின் போது உரிய கட்டிடங்களின் கிரயம் மூலதனமாக்கப்பட்டது என்பது. | மேற்கொள்ளப்படும் செலவினங்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 18 ஆம் பந்தியின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்பாக இனங்காணப்பட வேண்டியது கடந்த கால நிகழ்வுகளிலிருந்து உருவாகும் ஆனால் கடப்பாடுகளை தீர்ப்பதற்கு பொருளாதார நலன்களை கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல் இல்லாதிருந்தமை அல்லது கட்ப்பாட்டின் அளவானது போதிய நம்பகத்தன்மையடன் அளவிட முடியாத காரணத்தால் இனங்காணப்படும் தற்போதைய கடப்பாடு ஆகும். அந்நாரான கடப்பாடுகள் நியமத்தின் 35 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புகளாக இனங்காணப்பட கூடாததுடன், 100 ஆம் பந்திக்கமைய நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தல் மாத்திரம் போதுமானதாக காணப்பட்ட போதிலும், நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகளுக்காக நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறையல்லாத பொறுப்புகளினுள் ரூபா 11.47 மில்லியனான நிகழத்தக்க பொறுப்பகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. | இந்த தொகை 2023 ஆம் ஆண்டு வரையிலும் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் அட்டுறுச் செலவினமாக காண்பிக்கப்பட்டதுடன், 2022 ஆம் ஆண்டு நீங்கலாக ஒவ்வொரு வருடமும் ஒதுக்கமாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டுள்ள போதிலும், அது சரியானது அல்ல என்பதால் 2024 ஆம் ஆண்டின் போது ஏற்பாடு மேற்கொள்ளப்படாது நிகழத்தக்க பொறுப்பொன்றாக கணக்கு வைக்கப்பட்டுள்ளமை. | லங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வருமானத்தினுள் கடந்த ஆண்டுக்காக கிடைத்திருந்த ரூபா 101.38 மில்லியன் பாடநெறி வருமானங்கள் பாடநெறி வருமானமாக கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் முறையே மிகை மற்றும் பிற்போடப்பட்ட பொறுப்புகள் அந்த அளவினால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டுகளுக்காக ரூபா 54.28 மில்லியன் பெற வேண்டிய வருமானமாக 2024 ஆம் ஆண்டுக்காக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அனைத்து தேசிய நிறுவனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களால் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக (CBT Course) பெயரளவுப் பெறுமதிகளே அறவிடப்பட்டன. இந்த தொகை இலாபமீட்டும் நோக்கில் அநவிடப்படாததுடன், நிறுவனத்தின் சிறு செலவினங்களை தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படுகின்மை. | கணக்காண்டு வருமானத்தினுள் கிடைத்த எனினும் எதிர்வரும் ஆண்டுகளுக்கரிய வருமானங்களை சரியான இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிப்புனதா சிசு சவிய எனும் புலமைப்பரிசில் கடந்த ஆண்டுக்கு உரியதாக ரூபா 29.07 மில்லியன் செலவினம் மீளாய்வாண்டின் செலவினமாக கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் மிகை மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டம் ஆகியன முறையே குறைத்தும் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தன. | இந்த தவறை 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக திருத்தப்பட்டுள்ளதுடன், 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 23.21 மில்லியனான செலுத்த வேண்டிய நிபுணத்தா சிசு சவிய செலவினங்கள் வரவு வைக்கப்பட்டு செலுத்த வேண்டிய நிபுணத்தா சிசு சவிய (அட்டுறு) செலவினங்கள் செலவு வைக்கப்பட்டுள்ளன என்பது. | ஆண்டுக்குரிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டுக்குரியதாக அமைச்சிடமிருந்து பெற வேண்டிய செயலாற்றல் படிகள் ரூபா 12.85 மில்லியன் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பணம் நாளதுவரையாக கிடைப்பதில்லை என்பதுடன், கிடைக்கும் அளவினை திட்டவட்டமாக இனங்காணுவதற்கு, பெற வேண்டிய செயலாற்றல் படிகளாக கணக்கு வைத்தல் கடினமானதாகும். இந்த நடைமுறையினுள் ஏற்படும் தாமதங்களை தவிர்ப்பதற்காக 2025 ஆம் ஆண்டு முதல் 2025 இற்கு உரியதாக பெற வேண்டிய பணத்திற்கு மதிப்பிடப்பட்ட தொகையை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மீளாய்வாண்டின் வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2023 ஆம் ஆண்டுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 1 மில்லியனான பருவகால சீட்டுகளின் செலவினத்தை செலவினமாக காண்பித்தமையால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் திரண்ட மிகை ஆகியன அந்த அளவினால் முறையே குறைத்து மற்றும் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கபபட்டிருந்தன. | அறிக்கையின் விடயங்களுடன் இணங்குகின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்பாடாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆண்டுக்குரிய செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | 1994 மற்றும் 2002 ஆம் ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் 99 வருட குத்தகையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 222.73 மில்லியன் பெறுமதியான ஒருகொடவத்தயில் உள்ள காணிகள் அதிகாரசபையால் 50 வருட குத்தகைக்கு என கருதி வருடாந்த காலக்கழிவு ரூபா 2.20 மில்லியன் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ஆண்டின் மிகை மற்றம் குத்தகை காணியின் பெறுமதி ரூபா 2.20 மில்லியனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஒருகொடவத்தயில் அமைந்துள்ள காணியை சொத்துக்கள் கட்டமைப்பினுள் உள்ளடக்கும் போது குத்தகைக் காலத்தினை 50 வருடங்களாக உள்ளடக்கப்பட்ட வழு எதிர்காலத்தில் திருத்தப்படும் என்பது. | ஆண்டுக்குரிய வருடாந்த காலக்கழிவு சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்ட வேண்டும். |
| (ஊ) | கொழும்பு மாவட்ட அலுவலகம் அமைந்துள்ள ரூபா 47.77 மில்லியன் கிரயமான கட்டிடத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபாா 2.39 மில்லியன் ஆனமையால் அதிகாரசபையால் ரூபா 199,047 தொகை வருடாந்த பெறுமானத் தேய்வான கணக்கு வைக்கப்பட்டிருந்த காரணத்தால் தேறிய கட்டிடங்களின் பெறுமதி மற்றும் ஆண்டின் மிகை ரூபா 2.19 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கொழும்பு மாவட்ட அலுவலகத்தின் கட்டிடத்திற்காக வருடாந்த பெறுமானத்தேய்வு ரூபா 2.19 மில்லியன் குறைத்து பதிவு செய்யப்பட்ட வழுவினை எதிர்காலத்தில் திருத்தப்படும் என்பது. | ஆண்டுக்குரிய பெறுமானத் தேய்வினை சரியாக கணக்கிட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (எ) | அதிகாரசபையால் 2023 ஆம் ஆண்டுக்குரிய கட்டிடங்கள் வாடகை கொடுப்பனவு ரூபா 1.27 மில்லியன் மீளாய்வாண்டின் செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த | வாடகைக் கொடுப்பனவுகளில் சில மாதங்கள் 2024 ஆம் ஆண்டுக்குரியவை என்பதால் 2023 ஆம் ஆண்டுக்குரிய ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்படாமையால் 2024 ஆம் ஆண்டின் | ஆண்டுக்குரிய கட்டிட வாடகை சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணத்தால் ஆண்டின் மிகை மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட ஈட்டம் ஆகியன முறையே அந்த அளவினால் குறைத்து மற்றும் அதிகரித்து நிதிக்கூற்றக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | செலவினங்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும், இதற்காக நிதிப்பிரமாணம் 115 அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவ்வாறான செலவினங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் நிதிப் பிரிவிற்கு அறிவிக்குமாறு நிர்வாகப் பிரிவிற்கு மேலும் அறிவுறுத்தப்பட்டுள்ளமை. | |
| (ஏ) | மீளாய்வாண்டினுள் கடந்த ஆண்டு தவறுகளின் திருத்தங்களாக கருதி வழுக்களுடன் கட்டிட பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கிலிருந்து ரூபா 10.20 மில்லியன் அகற்றப்பட்டமையால் நிறுத்தி வைக்கப்பட்ட இலாபம் மற்றும் கட்டிடங்களின் தேறிய பெறுமதி அந்த அளவினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கணக்கு வைக்கப்பட்டுள்ள ரூபா 102.22 மில்லியனான கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்தின் செயற்திட்ட கட்டிடங்களின் பெறுமதிக்குரிய 2022 ஆம் ஆண்டுக்கான பெறுமானத் தேய்வு அகற்றப்பட்ட தவறு என்பது. | தவறுகளை திருத்தும் போது சரியான பேரேட்டுப் பதிவுகளை சரியாக பதிவு செய்துள்ளதாக சான்றுபடுத்தும் நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா மில். | தொடர்புடைய அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி<br>ரூபா மில். | வேறுபாடு<br>ரூபா மில். | முகாமைத்வத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய மீதி | 5.55 | 9.30 | 3.74 | இந்த வேறுபாட்டிற்கு காரணமாக அமைவது அதிகாரசபையால் தொழிலுக்குரிய பொதிக்காக சான்றிதழொன்று வழங்கப்படுவதுடன், TVEC இன் மூலம்குறித்த தொழிலுள்ள ஒவ்வொரு பொதிக்காகவும் தனித்தனி சான்றிதழ்களை வழங்குதல் ஆகும். | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டிய மீதிகின் சரியானதன்மையை உறுதிப்படுத்தியுள்ளதாக பணிப்பாளர் (நிதி) யினால் உறுதிப்படுத்த வேண்டும். |

### 1.5.4 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| விடயம் | தொகை ரூபா மில். | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| நுகர்வு பயிற்சி உபகரண இருப்பு | 7.86 | பொருள் வழங்கற் பத்திரங்கள் அல்லது அந்த பொருட்கள் விநியோகிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஏனைய ஆவணங்கள். | கட்டுநாயக்க பொறியியல் நிறுவனத்தின் மூலம் ரூபா 7.86 மில்லியன் பெறுமதியான நுகர்வு பொருள் இருப்பு பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டுள்ளமை. | பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்ட இருப்பின் பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிதிக்கூற்றக்களில் கடன் பட்டோர் மீதிகள் ரூபா 11.94 மில்லியனாக காணப்பட்டதுடன், இதில் 03 முதல் 20 ஆண்டுகள் வரையிலான கடன் நிலுவைகளின் தொகை ரூபா 6.90 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த மீதிகளை தீர்த்தல் தொடர்பில் அதிகாரசபை கவனம் செலுத்தவில்லை. | எதிர்காலத்தில், இவற்றைத் தீர்க்க அல்லது கட்டுப்பாட்டு சபையின் ஒப்புதலுடன் புத்தகங்களில் இருந்து அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் பட்டோர் நிலுவைகளை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவு மீதியாக ரூபா 12.06 மில்லியன் குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதில் 4 முதல் 13 ஆண்டுகள் வரையிலான | கடந்த காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட பணம் முறையாகக் கணக்கிடப்படாததால் இந்த நிலுவைகளை முன்னோக்கி கொண்டு வரப்பட்டுள்ளன. முதல் பட்டிலில் குறிப்பிடப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தின் | நிறுத்தி வைக்கப்பட்ட கொடுப்பனவு தீதிகளை திருத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வீச்சில் நிலவும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4.22 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த நிலுவைகளைத் தீர்ப்பதில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படவில்லை. | மதிப்பைக் கணக்கிடுவது சரியானது என்றாலும், அடுத்த பட்டியலில் தயாரிக்கப்பட்ட நிறுத்தி வைக்கப்பட்ட பணத்தின் மொத்த மதிப்பு கணக்கிடப்பட்டுள்ளது. முதல் பட்டியலில் கணக்கிடப்பட்ட தொகைக்கும், இரண்டாவது பட்டியலில் உள்ள தொகைக்கும் உள்ள வித்தியாசத்தை மட்டும் கணக்கு வைத்தல் சரியாக இடம்பெற வேண்டும். இவ்வாறு 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தால் தற்போதைய மீதிகளை சரியான மீதிகளாக கருத முடியாது மற்றும் அவை சரியான முறையில் திருத்தப்பட வேண்டும். | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கடன் கொடுத்தோரி மீதி ரூபா 9.43 மில்லியனாக இருந்ததுடன், இதில் 3 முதல் 16 ஆண்டுகள் வரையிலான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.40 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த நிலுவைத் தொகையைத் தீர்க்க அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கம்பனிகளுக்கு இடையேயான பரிவர்த்தனைகளாகப் (Intercompany Transaction) பதிவு செய்யப்பட்ட இந்தப் பரிவர்த்தனைகள் தவறானவை. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட அனைத்து பரிவர்த்தனைகளும் முந்தைய ஆண்டுகளின் கணக்குத் தகவலைச் சரிபார்த்து திருத்தப்பட வேண்டும். ஆனால், 2011 ஆம் ஆண்டுக்கு முன்னர், கணக்கீட்டு பணிகள் கைமுறையாக (Manual System) செய்யப்பட்டதால், அதிக கால அவகாசம் தேவைப்பட்டதுடன், பணியின் அளவு மற்றும் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, இதைச் செய்வது மிகவும் கடினமாகிவிட்டது. | கடன் கொடுத்தோர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.3 முற்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2011 முதல் 2022 வரை கொள்வனவு மற்றும் பிற நோக்கங்களுக்காக 89 வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 5.27 மில்லியன் முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன், அந்த மீதியில் சேர்க்கப்பட்டுள்ள ரூபா 1.45 மில்லியன் தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முற்பணங்களைத் தீர்ப்பதற்குத் தேவையான மூல ஆவணங்கள் சேகரிக்கப்பட்டு, மேலும் அந்த முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.. | வழங்கப்பட்ட முற்பணத்தை பணி நிறைவடைந்தவுடன் உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 15(1) ஆம் பிரிவு | அதிகாரசபையின் தேசிய நிறுவனங்களால் நடாத்தப்படும் 37 பகுதிநேர பாடநெறிகளில் எதுவும் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்படவில்லை. | பாடநெறிகளைப் பதிவு செய்வது தொடர்பாக, TVEC நிறுவனங்களை தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் 37 பகுதிநேர பாடநெறிகளுக்கான பதிவை பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | பதிவு செய்யப்படாத பகுதிநேர பாடநெறிகளைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 104(1)(அ), 104(3), 104(4) | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற 15 வாகன விபத்துக்கள் தொடர்பில், அதிகாரசபை நிதிப்பிரமணத்தின் பிரகாரம் செயற்படவில்லை. | 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற வாகன விபத்துகள் குறித்து முதற்கட்ட விசாரணைகளை மேற்கொள்வதற்காக தலைவரின் ஒப்புதலுடன் 02 ஆண்டுகளுக்கு 02 | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தனித்தனி முதற்கட்ட விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.<br><br>இதன்படி, குறித்த விபத்துக்கள் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையை உடனடியாக சமர்ப்பிக்குமாறு 2025 மார்ச 04 ஆம் திகதி சம்பந்தப்பட்ட குழுவிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | நிதிப் பிரமாணம் 454 | ரூபா 12.49 மில்லியனான வாசிகசாலைப் புத்தகங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வாசிகசாலைப் புத்தகங்கள் நிலையான சொத்துக்களின் கட்டமைப்பிற்கு உள்ளடக்கப்படாத போதிலும், (Excel sheet மூலம்) நாளதுவரையாக்கப்பட்டுள்ளமை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 17 ஆந் திகதிய பொது முயற்சிகளுக்கான நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 3.2 ஆம் பந்தி | அதிகாரசபையினால் நலன்புரி கொடுப்பனவளை செலுத்துவதற்காக சுற்றறிக்கையின் பிரகாரம் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது 2024 ஆம் ஆண்டின் போது மாத்திரம் ரூபா 7.20 மில்லியனான மருத்துவ பட்டியல்கள் மீளளிப்பு செய்யப்பட்டிருந்தன. | நலன்புரிக் கொடுப்பனவகளாக மருத்துவ உதவி முன்மொழிவு முறையின் கீழ் மருத்துக படிகள் பட்டியல்களுக்காக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் தலைமை அலுவலகத்திற்குரிய 02 வங்கி நடைமுறைக் கணக்குகளின் ரூபா 744,778 கூட்டுத்தொகையான மீதியொன்னு 01 முதல் 02 வருடங்கள் வரையான காலம் எதுவித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படாது செயற்பாடற்று காணப்பட்டது. | இலக்கம் 174100280020785 கொண்ட மற்றும் 7171696 இலக்கமுடைய கணக்குகள் செயற்பாடற்ற காணப்பட்டமையால் அவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | செயற்பாடற்ற வங்கிக் கணக்குகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

# 2. நிதிசார் மீளாய்வு

## 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 178.30 மில்லியனான மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த கடந்த வருடத்தின் பற்றாக்குறை ரூபா 81.59 மில்லியன் ஆகும். அதற்கமைய நிதிப் பெறுபேறுகளில் ரூபா 259.89 மில்லியனான அதிகரிப்பொன்று நிலவியது. இந்த அதிகரிப்பிற்கு திறைசேரி மானியங்கள் அதிகரித்தமை மற்றும் பாடநெறி வருமானங்கள் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

### 2.2.1 2023 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக பாடநெறி வருமானம் மற்றும் செலவினம் அதிகரித்தல் அல்லது வீழ்ச்சியடைதல்

2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 இல் முழு நேர பாடநெறி வருமானம் 4 சதவீதம் அதிகரித்துள்ளது மற்றும் 2023 உடன் ஒப்பிடும்போது 2024 இல் பகுதி நேர பாடநெறி வருமானம் 138 சதவீதம் அதிகரித்துள்ளது. 2023 உடன் ஒப்பிடும்போது 2024 இல் பயிற்சி பாடநெறிச் செலவினங்கள் 15 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டின் அதிகாரசபையின் திரவத்தன்மை விகிதங்கள் பின்வருமாறு.

| திரவத்தன்மை விகிதங்கள | 2023 | 2024 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2.87 | 3.90 |
| விரைவுச் சொத்து விகிதம் | 2.52 | 3.43 |

கடந்த ஆண்டின் மற்றும் மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் முறையே 2.87 மற்றும் 3.90 ஆக காணப்பட்டதுடன், விரைவுச் சொத்து விகிதம் முறையே 2.52 மற்றும் 3.43 ஆன பெறுமானத்தை கொண்டிருந்தது. அதற்கமைய அதிகாரசபையின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் ஆகியன சிறந்த மட்டத்தில் நிலவின.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் தலைவருக்கு வாகனம் ஒதுக்கப்பட்ட நிலையில், மாதாந்த வாடகையாக ரூபா 297,500 தொகையான வாடகை செலுத்தும் அடிப்படையில் ஒரு கார் பெறப்பட்டு, 2024 மே மாதம் முதல் 2025 மார்ச் மாதம் வரை ரூபா 3.07 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது.<br><br>தலைவர், உப தலைவர் உள்ளடங்களாக பணிப்பாளர்களின் பயன்பாட்டிற்காக குத்தகை அடிப்படையில் ஐந்து வாகனங்களை வாங்குவதற்கு பாதீட்டு மதிப்பீடுகளில் ரூபா 14.6 மில்லியன் நிதியேற்பாடுகள் சேர்க்கப்பட்டிருந்தாலும், குத்தகை முறையின் கீழ் பெறப்பட்ட வாகனம் முன்னாள் தலைவரால் தலைவரின் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டதுடன் அவர் அதிகாரசபையை விட்டு வெளியேறும்போது அதிகாரசபையிலேயே வைக்கப்பட்டிருந்தமையால் புதிய தலைவர் நியமிக்கப்பட்ட பிறகு வாகனம் பயன்படுத்தப்படாததால் 2025 மார்ச் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது மற்றும் வாகனம் குத்தகை நிறுவனத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டுள்ளமை. | வாகனம் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது. |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டில், துறைமுகத்திலிருந்து அகற்றுவதற்கு அதிகாரசபையால் ரூபா 16.51 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலுமத், PEUGEOT ரக கார் அந்த ஆண்டு முதல் 2024 ஜனவரி வரை பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 2024 ஆம் ஆண்டில் 7,028 கிலோமீட்டர் தூரம் மாத்திரம் ஓட்டத்தில் ஈடுபட்டிருந்தது. 2025 | 2016 ஆம் ஆண்டு மானியமாக வழங்கப்பட்டு, பயன்படுத்தப்படாமல் ஒரே இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த இந்த வாகனம் 2023 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், இந்த கார் 2024 ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கு எடுக்கபடப்டுள்ளது. இந்த காரைப் பயன்படுத்துவதற்கான | மோட்டார் வாகனத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் அந்த கார் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற நிலையில் காணப்பட்டது. | செலவு (Fuel cost, running repair cost) அதிகமாக இருப்பதால், தற்போது இந்த கார் பயன்படுத்தப்படுவதில்லை. கடந்த அமைச்சின் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில், 2025 ஏப்ரல் 30 ஆந் திகதிய அமைச்சின் செயலாளரின் கருத்தின்படி இந்த வாகனங்களை அமைச்சுக்கு அனுப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், தலைவர் பணிப்பாளருக்கு (நிர்வாகம்) அறிவித்துள்ளதுடன், எதிர்காலத்தில் அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும். |

### 3.2 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுச் சட்டம் பகுதி II இன் அத்தியாயம் VI, பிரிவு 37(உ) இன் படி 2024 ஆம் ஆண்டில் தொழில் பயிற்சி குறித்த ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொழிற்பயிற்சி குறித்த அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முறையான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் தேவையான பணியாளர்களை பெற்றுக்கொண்ட பின் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இருப்பினும், தொழிற்கல்வி ஆணைக்குழுவால் நடத்தப்படும் ஆராய்ச்சிகளுக்கு நிறுவன உத்தியோகத்தர்களால் பங்களிப்பு வழங்கப்படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் தொழில் பயிற்சி குறித்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சட்டத்தின் 37(ஊ) பிரிவின்படி பல்வேறு திறமைகளை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்காகவும் போட்டிகள் நடாத்தப்படவில்லை. | பல்வேறு திறமைகளை வளர்த்து மேம்படுத்துவதற்கான போட்டிகளை அதிகாரசபை நடாத்தியிருக்கவில்லை. தொழில்சார் பயிற்சித் துறையை மேம்படுத்துவதற்கான | சட்டத்தின்படி, பல்வேறு திறமைகளை வளர்த்து மேம்படுத்துவதற்கான போட்டிகளை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | போட்டிகள் தற்போது அனைத்து நிறுவனங்களின் பங்கேற்புடன் வரிசை அமைச்சினால் நடாத்தப்படுகிறது. | |
| (இ) | சட்டத்தின் 37(எ) பிரிவின்படி தொழிற்பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பயிற்றுவிக்கும் திறன்களை மேம்படுத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் 2020 முதல் 2024 வரை மேற்கொள்ளப்படவில்லை. | தொழில்சார் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பயிற்றுவிக்கும் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக அந்த நிறுவனங்களின் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில்துறைசார் பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பிற நிறுவனங்களின் பயிற்றுவிக்கும் திறன்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சட்டத்தின் பிரிவு 37(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் தொழிற்பயிற்சி தொடர்பாக ஆணைக்குழுவிற்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கவில்லை. | தொழிற்பயிற்சி தொடர்பாக ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவது அதிகாரசபையின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்றாலும், அந்த ஆலோசனை வழங்குவது ஒருபோதும் இடம்பெறவில்லை. இது தொடர்பாக ஆணைக்குழுவால் ஆலோசனை கோரலும் இடம்பெற்றிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் தொழில் பயிற்சி வழங்குவது குறித்து ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். |
| (உ) | ஒருகொடவத்த பயிற்சி நிலையத்தில் 2022 ஜூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு 2025 யூலை மாதத்தில்நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள தாதியர் டிப்ளோமா பாடநெறியின் இரண்டாவது தொகுதியாக 44 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில், 21 மாணவர்கள் அதாவது 48 சதவீதம் பேர் பாடநெறியை கைவிட்டு சென்றுள்ளனர். இந்தப் பாடநெறிக்கு ரூபா 25,000 படியாக 12 தவணைகளாக ரூபா 300,000 செலுத்துமாறு கூறி எந்த அடிப்படையும் இல்லாமல் | 2022 ஜூலை 12 ஆம் திகதி பதிவு செய்யப்பட்ட தாதியர் மாணவர்களின் தொகுதியின் ஆட்சேர்ப்பின் போது 44 பயிலுநர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், பயிற்சி பெற்றவர்கள் வெளிநாடு செல்வது, வேலையில் ஈடுபடல் போன்ற தனிப்பட்ட காரணங்களால் பாடநெறியை கைவிட்டுச் சென்றுள்ளனர்.<br><br>பாடநெறி கட்டணமாக ரூபா 300,000 வசூலிக்கப்படுவதுடன், பாடநெறி கட்டணம் குறித்து பெற்றோருக்கு தெரிவிக்க 2024 ஆம் ஆண்டின் பெப்ரவரி 16 ஆந் திகதி | பாடநெறி கட்டணங்கள் சரியான அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு பாடநெறி கட்டணங்களை வசூலிக்கவும், மாணவர்களை பாடநெறிகளில் தக்கவைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணம் செலுத்தும் திட்டம் முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த திட்டத்தின் படி, 2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், ஒரு மாணவர் ரூபா 250,000 தொகையை அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. எவ்வாறான போதிலும், தற்போது பாடநெறியைப் பயின்று வரும் 23 மாணவர்கள் மீளாய்வாண்டின் இறுதிக்குள் அதிகாரசபைக்கு ரூபா 4.97 மில்லியன் செலுத்தியிருந்தனர். கட்டணம் வசூலிப்பது தொடர்பாக அதிகாரசபைக்கும் மாணவர்களுக்கும் இடையே இணக்கப்பாடு ஏற்படாததால், கட்டணங்களை வசூலிப்பதில் நிச்சயமற்ற நிலையொன்று நிலவியது. | பெற்றோர் கூட்டம் நடாத்தப்பட்டது.<br><br>தொடர்புடைய நிலுவைத் தொகையை வசூலிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன, மேலும் மாணவர்கள் பாடநெறி கட்டணங்களை செலுத்த விருப்பம் தெரிவித்துள்ளனர். | |
| (ஊ) | 2017 ஆம் ஆண்டு ஒருகொடவத்தை பகுதியில் கட்டப்பட்ட கொழும்பு வெளிவட்ட வீதி காரணமாக ஒருகொடவத்தை மோட்டார் பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் கட்டிடங்களின் ஒரு பகுதி இடிக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு அகற்றப்பட்ட இரும்பு கட்டமைப்புகள் மற்றும் ஏனைய பகுதிகள் உரிய முறைமையின்றி பொறுப்பான உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின்றி பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பொறுப்பில் மட்டுமே வைக்கப்பட்டிருந்தன. இந்த இரும்பு இருப்பின் பாதுகாப்பிற்காக, 2018 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை ரூபா 8.13 மில்லியன் பாதுகாப்புச் | கைத்தவிர்ப்பு செயல்முறை முறையாகப் பின்பற்றப்பட்டு, இந்த இரும்பு கட்டமைப்புகள் மற்றும் தொடர்புடைய இருப்பு எதிர்காலத்தில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இரும்பு கட்டமைப்புகள் மற்றும் பிற பாகங்கள் சரியான முறையில் மற்றும் ஒரு பொறுப்பான உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் வைக்கப்பட வேண்டும் அல்லது உரிய முறையில் விலைக்கேள்வி கோரல் அல்லது ஏலமிடல் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமாகச் செலுத்தப்பட்டதுடன், இரும்பு இருப்பு விற்பனைக்காக, 2022 மார்ச் 21 ஆந் திகதி அன்று அரச விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து ரூபா 30 மில்லியன் பெறுமதிக்கு மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்ட போதிலும், உரிய முறையில் விலைக்கேள்வி கோருவதற்கு அல்லது ஏலம் இடம்பெற்றிராத காரணத்தால் இந்த இரும்பு இருப்பு 7 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பல்வேறு இயற்கை நிலைமைகளுக்கு முகங்கொடுத்தவாறு இற்றுப்போய் காணப்பட்டது. | | |
| (எ) | 2017 முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் 100 இற்கும் மேற்பட்ட மாணவர்களைச் சேர்த்திருந்த சிவில் பொறியியல் பிரிவிற்கு ஆஸ்திரிய செயற்திட்டத்தின் மூலம் ரூபா 286.33 மில்லியன் பெறுமதியான இருப்பில் சேர்க்கப்பட்ட மற்றும் இருப்பில் சேர்க்கப்படாத உபகரணங்களைப் பெற்றிருந்தாலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை முறையே 18 மற்றும் 12 ஆகக் குறைந்துள்ளமையால், இந்த உயர் பெறுமதிவாய்ந்த பயிற்சி உபகரணங்கள் அதிகபட்ச நலன்களை பெற்றுக்கொள்ளும் வகையில் பயன்படுத்தியிருக்கவில்லை. | கொரோனா நெருக்கடி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிலவிய அரசியல் நெருக்கடி நிலைமை, இந்த நிறுவனங்களின் ஊடாக டிப்ளோமா வழங்கப்படுவதுடன், டிப்ளோமா பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகள் குறைந்து வருவதும், ஆன்லைன் கற்பித்தல் காரணமாக கணினித் துறையில் பாடநெறிகளுக்கான கேள்வி அதிகரித்ததும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதற்கு காரணமாக அமைந்தது. | ஆஸ்திரிய செயற்திட்டத்தின் மூலம் வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்ட பொருட்களை அதிகபட்சமாகப் பயன்படுத்த அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 2020 ஆம் ஆண்டில் 87 மாணவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த Mechanical General Engineering பாடநெறிக்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 661.11 மில்லியன் மதிப்புள்ள உபகரணங்கள் பெறப்பட்டாலும், இந்த உபகரணங்களை திறம்படப் பயன்படுத்த திட்டமிடப்பட்டிராமையால், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை முறையே 25 மற்றும் 13 ஆக இருந்தது. இதன்படி, 2020 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 85 சதவீதம் குறைந்துள்ளது. | - மேற்படி - | சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் செயற்திட்டத்தின் மூலம் வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்ட பொருட்களை அதிகபட்சமாகப் பயன்படுத்த அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | செயற்திட்ட பெறுமதிக்கு சேர்க்கப்பட்டு செலுத்தப்பட்ட ரூபா 13.73 மில்லியன் தொகையான பயிற்சி உபகரணங்கள் கணக்காய்வு திகதியான 2025 மே 22 ஆந் திகதி வரையிலும் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைக்காது 3 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்ட போதிலும், அவற்றைப் பெறுவது குறித்து பொறுப்பான உத்தியோகத்தரால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முன்னாள் செயற்திட்ட பணிப்பாளரால் அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக வரிசை அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாவைத்துவ குழுவால் நியமிக்கப்பட்ட துணைக் குழுவினால் 2024 திசெம்பரில் நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது என்பது. | பயிற்சி உபகரணங்களுக்காக பணம் செலுத்தப்பட்ட மற்றும் நிறுவனத்தால் பெறப்படாத பயிற்சி உபகரணங்களைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

## 3.3 நிதியத்தின் குறைப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 7.41 மில்லியன் மோட்டார் சைக்கிள் நிதியம் 2017 முதல் தொடர்புடைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றில் ரூபா 7.27 மில்லியன் தொகை மோட்டார் சைக்கிள் நிதியத்தினுள் 2011 ஆம் ஆண்டின் ஆரம்ப இருப்பாக முன்கொண்டுவரப்படுவதுடன், | பல ஆண்டுகளாக விளைவற்றுக் காணப்படும் நிதியை, அந்த நிதி திரட்டப்பட்ட நோக்கத்திற்காக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | இந்த தொகை நிதி ரீதியாக காணப்படவில்லை. இது NAITA Fund நிதியில் சீராக்கம் செய்யப்பட வேண்டும். பண அடிப்படையில் காணப்படுவது கடந்த ஆண்டில் ஈட்டப்பட்ட வருமானம் ஆகும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை அறிமுகப்படுத்துவதற்காக கிராமிய மட்டத்தில் விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை செயல்படுத்தும் நோக்கில், கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனத்தில் ஒரு நடமாடும் பேருந்து ஒன்று இயக்கப்பட்டது. 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை அந்தப் பேருந்திற்கான வருமான அனுமதிப்பத்திரம், பழுதுபார்ப்பு மற்றும் போக்குவரத்து சபைக்கு ரூபா 1.05 மில்லியன் செலவினம் செய்யப்பட்டதுடன், ரூபா 7.20 மில்லியன் மதிப்புள்ள மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுடன் கூடிய 06 பட்டறைகள் இந்த நடமாடும் பேருந்தில் நிறுவப்பட்டன. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பேருந்திற்கும் மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்கும் காப்பீட்டுச் செலவினமாக ரூபா 552,604 செலவிடப்பட்டிருந்தது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் இந்த நடமாடும் பேருந்து பயிற்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன், ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக எந்தப் பயன்பாடும் இல்லாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | பேருந்தில் இருந்து மின் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை அகற்றுவது தொடர்பாக கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதுடன், அந்த உபகரணங்களை அகற்றி மின் மற்றும் இலத்திரனியல் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலத்திரனியல் பிரிவுக்கு வரும் மாணவர்களின் பயிற்சிக்காக மின் மற்றும் இலத்திரனியல உபகரணங்களை திறம்பட பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவனம் அமைந்துள்ள நிலத்தில் ரூபா 19.77 மில்லியன் செலவில் ஒரு தயாரிப்பு விற்பனை நிலையம் கட்டப்பட்டு, அதன் பணிகள் 2016 யூன் 11 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நாளிலிருந்து கணக்காய்வுத் திகதி வரை 09 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தக் கட்டிடம் எந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை. | அத்தியாவசிய உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதை மொழி மையமாகப் பயன்படுத்துவதற்கு தற்போது முன்மொழியப்பட்டுள்ளது. | கட்டிடத்தை உரிய நோக்கத்திற்கோ அல்லது வேறு ஏதேனும் ஆக்கபூர்வமான நோக்கத்திற்கு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பெறுகை நடைமுறையிலிருந்து விலகி, போட்டி அடிப்படையில் விலைக்கேள்வி கோரப்படாது 2023 ஆம் ஆண்டில் சேவையை வழங்கிய அதே நிறுவனத்திடமிருந்து 2024 ஜனவரி முதல் பாதுகாப்பு சேவையைப் பெற்றுக்கொள்ள அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருந்தது. சேவை ஒப்பந்த காலம் மூன்று முறை நீட்டிக்கப்பட்டதுடன், 2024 ஜூன் 27 ஆந் திகதி 6 ஆவது பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2024 ஜூலை 01 ஆந் திகதி முதல் 2025 யூன் 30 ஆந் திகதி வரை பாதுகாப்பு சேவைகளை வழங்குவதற்கான சேவை காலம் மீண்டும் நீட்டிக்கப்பட்டு 2024 ஜனவரி முதல் 2024 திசெம்பர் காலத்திற்கு பாதுகாப்பு கம்பனிக்கு ரூபா 69.78 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. குறைவான பாதுகாப்புப் பணியாளர்களை நியமிப்பது, ஒரே உத்தியோகத்தர் இரண்டு பெயர்களைப் பயன்படுத்தி கையொப்பப் பதிவேட்டில் கையொப்பமிடுவது மற்றும் வயதான பாதுகாப்புப் | அதிகாரசபையின் தலைமை அலுவலகம், மூன்று தேசிய நிறுவனங்கள், 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் பயிற்சி மையங்களுக்கான பாதுகாப்பு சேவைகள், 2023 ஜனவரி 01 முதல் 2023 திசெம்பர் 31 வரை வெளிவாரி நிறுவனமொன்றின் ஊடாக முறையான தேர்வு செயல்முறைக்குப் பிறகு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.<br><br>பாதுகாப்பு சேவைகள் 2024 ஜனவரி 01 முதல் 2024 ஜூன் 30 வரையான முதல் 06 மாதங்களுக்கு தலைவரின் ஒப்புதலுடனும், 2024 ஜூலை 01 முதல் 2025 ஜூன் 30 வரை நிர்வாகச் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையிலும் தற்போதுள்ள சேவை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம் நீட்டிக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2024 ஜூலை 01 முதல் 2025 ஜூன் 30 வரையிலான காலத்திற்கான ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது. அந்த | பெறுகை நடைமுறையை பின்பற்றி பாதுகாப்பு சேவையை வழங்க ஒரு நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க அதிகாரசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணியாளர்களை பணியமர்த்துவது போன்ற குறைபாடுகள் இருந்தபோது, முகாமைத்துவத்தால் அந்த கம்பனியிலிருந்து பாதுகாப்புச் சேவைகளைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் மொத்த பெறுமதி ரூபா 71.33 மில்லியன் ஆகும். அந்த கூறு விலைகள் 2022 ஆம் ஆண்டில் விலைக்கேள்வி வழங்கப்பட்ட விலைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளமை. | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4.1 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக அதிகாரசபையினால் ரூபா 9.51 மில்லியன் கிரயத்துடனான 530 விரிவுரை மண்டப கதிரைகள் சந்தை விலை ஒப்பீட்டு முறைமையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு கிடைத்திருந்த 200 கதிரைகள் மற்றும் ஒருகொடவத்த மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிறுவனத்திற்கு கிடைத்திருந்த 130 கதிரைகள் விலைக்கேள்வியின் அமைப்புக் குறிப்பீடுகளுடன் இணங்காமையால் நவம்பர் 30 ஆந் திகதி முதல் பயன்படுத்தப்படாது களஞ்சியங்களில் காணப்பட்டன. கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்ட அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 200 விரிவுரை மண்டபக் கதிரைகள் உரிய நியமத்திற்கமைய காணப்படுவதனை பரிசோதிக்காது மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட விரிவுரை மண்டப கதிரைகளின் தரத்தினை பரிசோதிக்காது பொறுப்பேற்கும் பணிகள் இடம்பெற்றிருந்தன. | கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட அலுவலகங்களுக்கு தனியார் நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட 200 விரிவுரை மண்டப கதிரைகளின் விபரங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு மற்றும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட முகாமையாளர்களினால் பரிசோதிக்கப்பட்டு முறையான தரம் வாய்ந்தவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 200 கதிரைகள் தொடர்பான கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் தயாரிக்கப்பட்டு பணம் செலுத்துவதற்காக அனுப்பி வைக்கப்பட்டதுடன், கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு விரிவுரை மண்டப கதிரைகளை வழங்கியதன் பின்னர், குறித்த நிறுவனம் கதிரைகளின் அமைப்புக் குறிப்பீடுகளுடன் வேறுபாடுகள் இருப்பதாக தெரிவித்து நிர்வாக பிரிவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.<br><br>இதன்படி, இந்த விரிவுரை மண்டப கதிரைகள் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக வழங்குநர்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவுடன் கலந்தாலோசித்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட வேண்டும் மற்றும் விவரக்குறிப்புகளுடன் பொருந்தும் பொருட்கள் மட்டுமே கொள்வனவு செய்யப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் | பரிந்துரைகள் |
|---|---|---|

**அபிப்பிராயம்**

வெளிவாரி மதியுரையாளர்களுக்கு முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன், மீளாய்வாண்டின் போது 307 வெளிவாரி மதியுரையாளர்களுக்கு கொடுப்பனவுகளாக ரூபா 97.07 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே, இந்த செலவினங்கள் தொடர்பில் தலைமை அலுவலகத்தால் எதுவித மேற்பார்வையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

வெளிவாரி மதியுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையை உரிய முறையில் மேற்கொள்வதற்காக 2024 ஆம் ஆண்டின் இறுதி அரையாண்டு முதல் நிலவும் மதியுரையாளர் வெற்றிடங்களுக்கு NAITA Face Book page மூலம் நாடு முழுவதும் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களுக்கு தலைமை அலுவலகத்தின் உயர் முகாமைத்துவத்தின் பங்குபற்றலுடன் நேர்முகப் பரீட்சைகளை நடாத்தி தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டிலுக்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தினை பெற்று தேவைக்கேற்ப மதியுரையாளர்கள் இணைத்துக்கொள்ளப்படுகின்றனர்.

வெளிவாரி மதியுரையாளர்களின் கொடுப்பனவுகளை இற்றைப்படுத்துவதற்கு மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் தொடர்பிலான தகவல்கள் பயிற்சிப் பிரிவினூடாக கண்காணிக்கப்பட்டு தலைமை அலுவலகத்தின் கணக்குகள் பிரிவின் பரிசோதனையின் அடிப்படையில் 2025 ஏப்ரல் முதல் முற்கொடுப்பனவுகள் ஒவ்வொரு மாதமும் 10 ஆந் திகதி இடம்பெறுகின்றமை.

வெளிவாரி மதியுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறையை உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், கொடுப்பனவுகள் தொடர்பில் கண்காணிப்பு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும்.